பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,பி.எல்.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 19 (5—11—71) வெள்ளி | வெளியூர்: ஐப்பசி 20 (6—11—71) சனி [இதழ்: 119

புயலால் இறந்தோர் 10,000 பேர் என அறிவிப்பு

புவனேசுவரம், நவ. 5—
அண்மையில் ஒரிசாவில் ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு உதவி செய்யும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கின்றனர்.

புயலில் சிக்கி மாண்டவர்கள் எண்ணிக்கை 10,000 என அதிகாரபூர்வமாக இப்போது மதிப்பிடப்பட்டிருக்கிறது; இதில் கட்டாக்கில் மட்டும் இறந்தோர் தொகை 7,000 என்று கூறப்படுகிறது.

இருட்டடிப்பு ஏடுகளைத் தீண்டாதீர்

கழகத் தோழர்களுக்குக் கண்டிப்பான வேண்டுகோள்

'நடுநிலை' என்ற பெயரால் எதிர்ப் பிரசாரம் செய்யும் ஏடுகளுக்கு நாம் தரும் தண்டனை

சேலம் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் உரை

சேலம், நவ. 5—

"பத்திரிகைச் சுதந்தரத்தைக் காப்பாற்ற நான் கடமைப்பட்டிருக்கிறேன்; பத்திரிகையில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலன் காக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

"ஆனால், நடுநிலையாக இருப்பதாகக் கூறிக்கொண்டு நமது கழகச் செய்திகளை மறைப்பதும், மற்றவர்கள் செய்தியை மிகைப்படுத்துவதுமான இருட்டடிப்புச் செய்யும் பத்திரிகைகளை வாங்குவதில்லை என்ற தண்டனையைக் கழகத் தோழர்கள் — பொதுமக்கள் அளித்திட முன்வரவேண்டும்.

"இது, அவர்கள் திருத்துவதற்காகத் தரப்படும் தண்டனை; இதை நான், 'முதலமைச்சர்' என்ற முறையில் கூறவில்லை; 'கழகத் தலைவன்' என்ற முறையில் கூறுகிறேன்; இதையும் தற்காலிகமாகத்தான் கூறுகிறேன்"

என்று, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், சேலத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் அறிவித்தார்.

சேலம் மாவட்டப் பொதுமக்கள் சார்பில் முதல்வர் கலைஞருக்குப் பாராட்டுக் கூட்டம் நேற்று மாலை புத்துணர்வுக் கலை மன்றத் திடலில் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்; தாய்மார்கள் பெருமளவில் கூடியிருந்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கலைஞரை வரவேற்றனர்.

மாவட்ட அவைத் தலைவர் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் க. இராசாராம், மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருட்டினன் எம்.பி., மா. முத்துசாமி எம்.பி., சேலம் நகராட்சித் தலைவர் பழனியப்பன், ஆறுமுகம் எம்.எல்.ஏ., செயராமன் எம்.எல்.ஏ, செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., அன்புக்கரசு ஆகியோர் பேசினர்.

எண்ணிக்கை தருவதில் ஏன் இந்த முரண்பாடு?

கலைஞர் தமது உரையில் மேலும் கூறியதாவன:—

"இந்தக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் நீங்கள் கூடியிருக்கிறீர்கள்; இவ்வளவு பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தது பற்றியும், மிகச் சிறப்பான முறையில் வரவேற்பு—பாராட்டு அளித்தது பற்றியும் கழக ஏடுகளிலும், 'தினத் தந்தி' — 'மாலை முரசு' ஏடுகளிலும்தான் காண முடியுமே தவிர, 'நடுநிலை'ப் பத்திரிகைகளில் காணமுடியாது!

'காமராசர் சேலத்தில் பேசினார் — ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியோடு அவரது பேச்சைக் கேட்டார்கள்' என்றெல்லாம் அந்தப் பத்திரிகைகளில் செய்தி வரும்; அதிலும் முரண்பாடு இருக்கும் — ஒரு பத்திரிகையில், '25,000 பேர்' என்றும், மற்றொரு பத்திரிகையில் 'ஓர் இலட்சம் பேர்' என்றும் போடப்பட்டிருக்கும்.

ஒரு வேளை 25,000 என்பதற்கு ஆங்கில மொழி பெயர்ப்பு 'ஓர் இலட்சம்' என்று பொருள் இருக்குமோ — என்னவோ எனக்குத் தெரியாது!

அது மட்டுமல்ல; 'மக்கள் அமைதியாக இருந்து காமராசர் பேச்சைக் கேட்டது, வரலாற்றில் காண முடியாதது' என எழுதியிருக்கிறார்கள் என்று இங்கு பேசிய நண்பர்கள் குறிப்பிட்டு, 'காமராசர் பேசினால்தான் மக்கள் அமைதியாகக் கேட்பார்களா — மற்ற கட்சித் தலைவர்கள் பேசினால் கேட்கமாட்டார்களா? — இப்படியெல்லாம் செய்திகளைப் போடுகிறார்களே' என்று வருத்தப்படமாட்டார்கள்.

பொருள் என்ன அதற்கு?

அப்படி அவர்கள் செய்தி வெளியிட்டது காமராசருக்கு அனுகூலம்தானா என்பதை முதலில் பார்க்க வேண்டும்.

காமராசர் பேசும்போது அமைதியாக இருந்தார்கள் என்றால் — கரகோஷம் செய்யாமல் இருந்தார்கள் என்றால், 'காமராசர் பேச்சை மக்கள் வரவேற்கவில்லை' என்றுதான் பொருளாகுமே தவிர, வரவேற்பதாக ஆகாது!

அழியும் சிண்டிகேட்டுக்கு புத்துயிரூட்ட முயற்சி

இப்படிச் சில பத்திரிகைகள், அழியும் சிண்டிகேட்டுக்கு புத்துயிரூட்ட முற்பட்டிருக்கின்றன; அவைகள், நமது செய்திகளைக் குறைத்தும் — சுருக்கியும் போடுகின்றன.

சேலத்தில் இன்றைக்கு இலட்சக்கணக்கான மக்கள், என்னையும், அமைச்சர்கள் அன்பில், இராசாராம் ஆகியோரையும் வரவேற்று தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள்; இது வெளியே இருக்கின்ற பத்திரிகைகளுக்குத் தெரியாது; ஆனால், சேலத்து மக்கள் இது பற்றித் தவறான செய்திகள் வந்தால், உண்மையைத் தெரிந்து கொள்வார்கள்.

திட்டமிட்டுச் செய்கின்றனர்

திராவிட முன்னேற்றக் கழகம் — அதன் தோழமைக் கட்சிகள் ஆகியவைகளின் செய்திகளை அவர்களது ஏடுகள் இருட்டடிப்புச் செய்வதற்குக் காரணம், நமது வளர்ச்சியைக் குந்தகப்படுத்தி — எப்படியாவது அடுத்த தேர்தலில் நம்மை முறியடிக்க வேண்டும் என்பதே! அதற்காகவே, பழைய காங்கிரசுச் செய்திகளைக் கொட்டை எழுத்துக்களில் போடுகிறார்கள்!

கால் இல்லாவிட்டால் செயற்கைக் காலை கட்டி — கையில்லாவிட்டால் பொம்மைக் கையை வைத்து — பேச முடியாவிட்டால் பின்னாலிருந்து பேசி — நடக்க முடியாவிட்டாலும் நடை வண்டி தந்து நடக்க வைப்பதுபோல், அந்த அளவுக்குத் திட்டமிட்டு அவர்கள் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்!

சிண்டிகேட்டின் நிலை இதுதானா?

பொள்ளாச்சி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கிறார்; காங்கிரசு சார்பில் பொள்ளாச்சித் தேர்தலில் யாரும் நிறுத்தப்படவில்லை; அந்தத் தேர்தலில் நிற்க (சிண்டிகேட்) காங்கிரசு சார்பில் பொள்ளாச்சி நடராசன் முதலில் அனுமதி தரப்பட்டார்; இது பற்றித் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் கக்கன் அவருக்காக அனுமதிக் கடிதம் அனுப்பியிருக்கிறார்; அதில் அவர், 'காங்கிரசு வேட்பாளராக பொள்ளாச்சி நடராசன் நிற்கிறார்; அவருக்கு இராட்டைச் சின்னம் ஒதுக்கப்பட வேண்டும்' என்று எழுதியிருக்கிறார்; ஆனால், கடைசி நேரம் வரை, சிண்டிகேட் காங்கிரசு சார்பில் யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை.

அந்தப் பொள்ளாச்சி நடராசன், இதுபற்றி அறிக்கை வெளியிட்டிருப்பதாக அறிகிறேன்; அதில் அவர், 'நான் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு எந்தக் காங்கிரசுத் தலைவரும் என்னுடன் வரவில்லை; 'பணம் தருவார்கள்' என்று சுயேச்சைக்கு அந்த இடத்தை விட்டுத் தந்துவிட்டார்கள் — என்னைப் புறக்கணித்து விட்டார்கள்'—இந்தப் பொருளில் அந்த அறிக்கை இருக்கிறது.

இந்தப் பத்திரிகைகளின் போக்கு இப்படித்தான்!

சென்னைப் பத்திரிகைகளைப் பார்த்துக்கொண்டு பொள்ளாச்சிக்குப் போகாமல் இருந்திருந்தால் நான்கூட பயந்துபோயிருப்பேன்.

'தினமணி'— 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைகள் நம்மீது எரிச்சல் கொண்டுள்ளன; அவற்றில், பொள்ளாச்சியில் நான் பேசியதற்கோ—கழகத் தலைவர்கள் பேசியதற்கோ முக்கியத்துவம் தரப்படுவதில்லை; ஆனால், சுயேச்சை வேட்பாளர்கள் பேசினால் முக்கியத்துவம் தரப்படுகிறது.

மாநிலத்து சுதந்தராக் கட்சிச் செயலாளர் அறிக்கை விடுக்கிறார்; அது அந்த ஏடுகளில் வருவது மட்டுமல்ல — 'கோவை மாவட்டத்து சுதந்தரா ஊழியர் பல்லாயிரவர் உற்சாகம் பெறுகிறார்கள்' என்றும் எழுதிக் களிக்கின்றன;

'பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தாலும், கோவை மாவட்டத்தில் பிளேக் கிருமிகள் தெரிந்தாலும் தெரியலாம்—சுதந்தராத் தொண்டர்களைக் காண முடியாது' என்று அந்த மாவட்டத் தோழர்கள் கூறுகிறார்கள்.

இருட்டடிப்புச் செய்வதால் ஏற்படும் விளைவு என்ன?

இப்படிப்பட்ட செய்திகளை வெளியிடுவதால், சேலத்திலும் — திருச்சியிலும் — தஞ்சையிலும் — மதுரையிலும் — நெல்லையிலும் உள்ள தோழர்களுக்கு நமது வெற்றியில் சந்தேகம் தோன்றும் என்பது அந்த ஏடுகளின் கணக்காகும்!

நமது செய்தியை மறைத்து — மற்றவர் செய்தியை வெளியிடும் இருட்டடிப்பு ஏடுகளுக்குக் கூறிக்கொள்வேன் — இப்படிப் பயமுறுத்திச் செய்தி வெளியிடுவதால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தோழர்கள் இந்தச் செய்தியைப் பார்த்து உடனடியாகப் பொள்ளாச்சி புறப்பட்டு ஓடோடி வரும் நிலைமைதான் ஏற்படுமே தவிர, உங்களது எழுத்தை நம்பி எங்கள் தோழர்கள் ஏமாந்துவிட மாட்டார்கள்' என்று!

இந்த ஏடுகள் கட்டுப்பாடாகத் தவறான பிரசாரம் செய்து வருவது பெருகி வருகிறது.

பொள்ளாச்சித் தேர்தல் செய்திகளை ஒழுங்காக வெளிடாதது மட்டுமல்ல — ஒரு தரப்புச் செய்தியை இருட்டடிப்புச் செய்து இன்னொரு தரப்புச் செய்தியை மிகைப்படுத்திப் போடுகிறார்கள்; 'நியாயமானவர்கள்' என்றால், இருதரப்புச் செய்திகளையுமல்லவா போட வேண்டும்!

பொய்ப் பிரச்சாரம் செய்ததன் விளைவு

இந்தப் பத்திரிகைகள் 1971-ம் ஆண்டுத் தேர்தலில் செய்யாத இருட்டடிப்பா? செய்யாத பொய்ப் பிரச்சாரமா?

'இந்திரா காந்தி ஆட்சி டில்லியில் ஒழிய வேண்டும்' — தமிழ்நாட்டில் ஆட்சி ஒழியவேண்டும்' என்று பகிரங்கமாக இந்த ஏடுகள் முயன்றன; ஆனால் டில்லியில் இந்திரா காந்தி ஆட்சி அமைந்தது — இங்கே கழக ஆட்சி அமைந்தது!

'இந்திரா காந்தியின் வெற்றிக்குக் காரணம் காமராசர்' என்ற நிலை டில்லியில் மாறியது!

'1967-ல் கழக வெற்றிக்குக் காரணம் 'இராஜாஜி' என்ற நிலை இங்கே மாற்றப்பட்டது!

உண்மை நிலையை மெய்ப்பித்துக் காட்டினோம்

எங்களது வெற்றிகளுக்குக் காரணம், எங்களிடம் முற்போக்குக் கருத்துக்கள் இருந்தன— முற்போக்குத் திட்டங்கள் இருந்தன — எங்கள் கொள்கைகளுக்குச் சக்தி இருந்தது— என்பதுதான்!

அதனால்தான், இந்திரா காந்தியின் வெற்றிக்குக் காரணம் காமராசரோ, கழக வெற்றிக்குக் காரணம் இராஜாஜியோ அல்ல என்பதைத் தெளிவாக மெய்ப்பித்துக் காட்டினோம்."

திருவண்ணாமலையில் தொழில்பேட்டை

அதிகாரி தரும் விளக்கம்

இராணிப்பேட்டை, நவ. 4—
திருவண்ணாமலையில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு, தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது; குறைந்தபட்சம் 4 தொழிலதிபர்களிடமிருந்தேனும் மனுக்கள் வந்தால்தான் இத்தொழிற்பேட்டையை அமைத்துத் தர இயலும் என்று அரசு தெரிவித்துள்ளது.

இத்தகவலை, வட்டாரத் தொழில் வர்த்தகத் துறைத் துணை இயக்குநர் அர்த்தநாரி நிருபர்களிடம் கூறினார்.

இத்தொழிற்பேட்டையில் தொழிற்கூடம் அமைப்பதற்கான கட்டடங்கள் — மின்சாரம் — குடி நீர் போன்ற வசதிகளை அரசு ஏற்படுத்தித் தரும் என்றும், தொழிற்பேட்டை அமைப்பு பற்றி மேற்கொண்டு எல்லா விவரங்களையும் காட்பாடி எக்ஸ்டென்ஷ[illegible] னுடைய அலுவ[illegible]ள தொழில் நுட்பத் தகவல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு அறியலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.பி.
திருவள்ளுவராண்டு 2002 ஐப்பசி 19 (5—11—71) வெள்ளி

லிங்கன் சிலை யாருக்கு?

"பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் எந்தச் சட்டமன்றத் தொகுதி அதிக வாக்குகளைக் கழகத்திற்கு அளிக்கிறதோ அதற்கு, அமெரிக்காவிலிருந்து ஆபிரகாம் லிங்கனின் உருவச் சிலையை வாங்கிவந்து பரிசளிப்பேன்."

நமது கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள செய்தி இது; இந்தப் பரிசினைப் பெறும் வாய்ப்பு எந்தத் தொகுதிக்குக் கிட்டப்போகிறதோ தெரியவில்லை.

நம்மைப் பொறுத்தவரையில், எந்தத் தொகுதிக்குக் கிடைத்தாலும் மகிழ்ச்சியே; ஆனால், இப்பரிசினைப் பெற வேண்டுமென்று ஒவ்வொரு தொகுதியையும் தூண்டவேண்டியது நமது கடமையாகும்.

கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள பரிசைப் பற்றி நினைக்கும்போது, 'நமக்கு அதனைப் பெறும் வாய்ப்பில்லையே' என்று தமிழ் நாட்டில் உள்ள மற்றத் தொகுதிகளும் ஏங்கக்கூடும்.

ஆயிரம் பொன் கொடுத்தாலும், அமெரிக்காவிலிருந்து கலைஞர் கையால் வாங்கிவந்து கொடுக்கும் ஆபிரகாம் சிலையைப் பெற முடியாது; பொன்னைவிடப் பலமடங்கு மதிப்பு வாய்ந்த வாக்குச் சீட்டுதான் அந்தப் பரிசினைப் பெற்றுத் தரும்!

கலைஞர் அவர்கள் தேர்ந்தெடுத்த பரிசுப் பொருள் மிகப் பொருத்தமான ஒன்றாகும்; 'அமெரிக்க நாட்டில் அடிமை வியாபாரத்தை ஒழிப்பேன்' என்று சூளுரைத்து — தமது நாவன்மையால் மக்களைத் தட்டியெழுப்பி — அரசியல் வானில் சனநாயகச் சுடரொளி பரப்பி — நாட்டின் நாயகனாகவும் வந்து — கொண்ட இலட்சியத்தை நிறைவேற்றியவர் ஆபிரகாம் லிங்கன்; இறுதியில், கொள்கைப் பகைவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காந்தியடிகள் எப்படி நமது நாட்டுக்கு மட்டுமே சொந்தமானவர் அல்லரோ, அதைப் போன்றே ஆபிரகாம் லிங்கனும் அனைத்து நாட்டுக்கும் உரியவர் ஆவார்!

இந்த உலகப் பெருந்தலைவரின் உருவச் சிலை அமெரிக்காவிலிருந்து வாங்கி வரப்படுகிறது; அதுவும், கலைஞர் அவர்கள் கையால்......என்றால், அதன் சிறப்பைச் சொல்லவா வேண்டும்?

இதையெல்லாம் எண்ணும்போது, 'எந்தத் தொகுதி கொடுத்து வைத்திருக்கிறதோ' என்று ஏங்க வேண்டாம்; இதற்கு எதுவும் கொடுத்து வைக்க வேண்டியதில்லை; 'முயன்றால் நாமும் பெறலாம்' என்று ஒவ்வொரு தொகுதியினரும் பாடுபட வேண்டும்.

பொள்ளாச்சி இடைத்தேர்தலில் கழகம் வெற்றிபெறுவது என்பது மிகச் சாதாரணமான ஒன்று; எனவே, நாம் வெற்றி பெறுவதில் ஐயமோ, ஆச்சரியமோ ஏற்படுவதற்கில்லை; எதிர்த்துப் போட்டியிடுபவரைப் படுதோல்வியடையச் செய்து — அவருடைய பொறுப்புத் தொகை பறிமுதலாகும்படியாகச் செய்தால்தான், சிண்டிகேட் — சுதந்தரா பிற்போக்குக் கூட்டுக்குச் சரியான அடி விழுந்ததாக ஆகும்.

கடந்த பொதுத்தேர்தலில் பிற்போக்குச் சக்திகளை ஓட ஓட விரட்டியடித்த பெருமை நமது தமிழ்நாட்டுக்கு — அதிலும் குறிப்பாகக் கோவை மாவட்டத்துக்கு உண்டு; கோவை மாவட்டத்திலேயே ஒரே ஓர் இடம்தான் பிற்போக்குக் கூட்டணியால் ஆதரிக்கப்பட்ட விவசாயச் சங்க வேட்பாளருக்குக் கிடைத்தது; வேறு எந்த இடத்திலும் அவர்கள் தலைதூக்கவில்லை; அந்த ஒரே விவசாய சங்க எம்.எல்.ஏ.யும் இப்போது நமது கழகத்துக்கு வந்துவிட்டார்; எனவே, இனி சிண்டிகேட் — சுதந்தரா பிற்போக்குச் சக்திகளுக்கோ, அவற்றின் ஆதரவாளர்களுக்கோ கோவை மாவட்டத்தில் வேலை கிடையாது.

ஒரு காலத்தில் ஓர் இடத்தைக்கூடப் பிடிக்க முடியாத தி.மு.கழகம், இன்று கோவை மாவட்டத்தையே தனது கோட்டையாக்கிக் கொண்டுள்ளது; இதற்குக் காரணம், கழகத்தின்மீது மக்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைதான்!

அந்த நம்பிக்கை வீண் போகாதபடி கழகம், கடந்த நாலரை ஆண்டுக் காலமாக நல்லாட்சி நடத்தி — மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வந்திருக்கிறது; அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த இலட்சியப் பாதையில் கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்தி வருகின்றார்.

'அடிமைகளை ஒழித்தே தீருபவன்' என்று ஆபிரகாம் லிங்கன் சூளுரைத்ததைப்போல் — நமது கலைஞர் அவர்களும், 'மக்களின் வறுமை — வாட்டத்தை — இல்லாமையை — அறியாமையை ஒழிப்பேன்' என்று சூளுரைத்துக் கொண்டிருக்கிறார்; ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் இலட்சியம் நோக்கிப் பணியாற்றுகிறார்; அதன் ஒரு கூறாகத்தான், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை, பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் செயல்படுத்திவருகிறார்.

இருபதாண்டுக் காங்கிரசு ஆட்சியில் காணாத நன்மைகளெல்லாம் கழக ஆட்சியில் — கலைஞர் அரசில் கண்டுவருகிறார்கள் தமிழ் மக்கள்; மனச்சான்று உள்ள எவரும் இதனை மறுக்கமாட்டார்கள்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக — 'எதிர்க்கவேண்டுமே' என்பதற்காக இந்த ஆட்சியைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் பேசுபவர்களை, மக்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

எனவே, நடைபெறவிருக்கும் இந்த இடைத் தேர்தலில், 'கழக வேட்பாளருக்கே எங்கள் வாக்கு' என்று முடிவு செய்து — வாக்குச் சாவடிக்கு வரவும் தயாராக இருக்கும் வாக்காளப் பெருமக்களை வீடு தோறும் சென்று சந்தித்து — ஆதரவு கேட்கவேண்டியது நமது கடமையாகும்; இந்த ஒரு கடமையை மட்டும் ஒழுங்காகச் செய்துவிட்டாலே போதும் — நமது வேட்பாளர் மோகனராசு அமோக வெற்றிபெறுவது உறுதி!

ஆறு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது நாடாளுமன்றத் தொகுதி; இதில் உள்ள அத்தனை வாக்காளர்களையும் தனித் தனியாகப் பார்த்து நமது வேட்பாளர் ஆதரவு திரட்டுவதற்குக் காலம் போதாது; நமது வேட்பாளர் செல்லாத இடங்களுக்கெல்லாம், அவர் சார்பில் — கழகத் தொண்டர்களும், தோழமைக் கட்சித் தோழர்களும் சென்று 'உதயசூரியன்' சின்னத்தில் முத்திரையிடுமாறு ஒருமுறைக்குப் பலமுறை கேட்க வேண்டும்.

இந்தப் பணியில் எந்தத் தொகுதித் தோழர்கள் முன்னிற்கிறார்களோ அவர்கட்கு, கலைஞரின் ஆப்ரகாம் லிங்கன் சிலைப் பரிசு கிடைப்பது உறுதி!

நடராசர் சிலை நாடு திரும்பும்

அனைத்து நாட்டுப் போலீசு மூலம் நடவடிக்கை

எஞ்சியுள்ள சிலைகளைப் பாதுகாக்கத் தனிப் போலீசுப் பிரிவு — ஆலயங்கட்கு அறநிலையத் துறை கட்டளை

சென்னை, நவ. 4—

தமிழ்நாட்[illegible]ருந்து திருடப்பட்டு அமெரிக்[illegible]வுக்குக் கொண்டு போகப்[illegible]ருக்கும் நடராசர் சிலையை[illegible]ருப்பிக் கொண்டு வருவதற்[illegible]தவி அளிக்கும்படி அனைத்து[illegible]டுப் போலீசை, தமிழ்நாடு[illegible]லீசுக் 'குற்றப் பிரிவு கேட்டுக் கொண்டிருக்கிறது.

எட்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட இந்த நடராசர் சிலை, 1 40 மீட்டர் உயரமுள்ளது.

ஐம்பொன்னால் உருவாக்கப்பட்ட இதன் பெறுமானம் சுமார் ரூ. 75 இலட்சமாகும்.

கும்பகோணத்திற்கு அருகில் சிவபுரத்திலுள்ள பழைய ஆலயத்திலிருந்து இது திருடிச் செல்லப்பட்டிருக்கிறது.

"இந்தச் சிலை இப்போது நியூயார்க்கில் விற்பனைக்கு வந்திருக்கிறது" என்று உயர்தரப் போலீசு அதிகாரி கூறினார்.

"இவ்வாண்டு செப்டம்பர்வரை 63 சிலைத் திருட்டுக்கள் நடந்துள்ளன; 1970-ல் 113 சிலைத் திருட்டுகள் நடந்தன" என்றும் அவர் சொன்னார்.

"மீட்கப்பட்ட சிலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று நிச்சயமாகத் தெரியவில்லை" என்றும் கூறினார்.

"சிலைத் திருட்டுக்களைக் கண்டுபிடிக்க ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்படுகிறது" என்றும் அவர் சொன்னார்.

வரலாற்றுப் புகழ் பெற்ற விலை மதிப்புள்ள சிலைகளை விழிப்புடன் கவனித்துக்கொள்ளும்படி எல்லா ஆலய நிர்வாகிகளுக்கும் அறநிலையத்துறை ஆணைபிறப்பித்து உள்ளது.

சிறிய ஆலயங்கள் தங்களிடமுள்ள விலை மதிப்புள்ள சிலைகளைப் பத்திரமாகப் பாதுகாக்கப் பெரிய ஆலயங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வாக்குப் பெட்டி வைக்கத் தனிக் கட்டடம்

தேர்தல் ஆணைக் குழு யோசனை

புதுடில்லி, நவ. 4—

வாக்குச் சீட்டுக்களையும் மற்ற தேர்தல் சான்றேடுகளையும் பத்திரமாகப் பாதுகாப்பில் வைப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு சிறிய கட்டடத்தைக் கட்டவேண்டும் என்று தேர்தல் கமிஷன் யோசனை கூறியிருக்கிறது.

மாவட்டக் கருவூலத்தில் இவற்றை வைப்பதில் சிரமங்கள் இருந்ததால் அகில இந்திய தேர்தல் அதிகாரிகள் மாநாட்டில் இந்த யோசனை கூறப்பட்டது.

சில நேரங்களில் இந்த சான்றேடுகளை வேறு எங்காவது வைக்க வேண்டியிருக்கிறது; ஒரு சமயத்தில் ஓர் அறையில் அவற்றை வைக்க வேண்டியதாயிற்று; இந்த அறைக் கதவை சிறிது பலத்தைப் பயன்படுத்தினால் திறந்துவிட முடியும் என்று கூறப்பட்டது.

மாநிலங்களிலும் மற்ற மத்திய ஆட்சிப் பகுதிகளிலும் உள்ள வாக்காளர்களைக் கணக்கெடுப்பவர்கள் — மேற்பார்வையாளர் மற்ற தேர்தல் ஊழியர்களுக்கு ஒரே மாதிரியான சம்பள விகிதங்கள் இருக்கவேண்டும் என்பது கமிஷனின் மற்றொரு யோசனையாகும்.

ஒன்றிரண்டு மாநிலங்கள் நீங்கலாக மற்ற மாநிலங்களில் தேர்தல் ஊழியர்களுடைய சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதாகவும், அவர்கள் பணிபுரிய வேண்டியிருக்கும் சிரமமான சூழ்நிலைமைகளைக் கருதி அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கமிஷன் கூறியது.

விலை ஏறியதன் விளைவு

தஞ்சையில் நெல்லுக்கு 'லெவி' முறை

அரசு உத்தரவு உடனடியாக அமுல்

சென்னை, நவ. 5—

"தஞ்சை மாவட்டத்திலிருந்து வியாபாரிகள் வாங்கும் அல்லது வெளியே எடுத்துச் செல்லும் நெல் — அரிசியில் கால் பங்கை (25 சதவிகிதத்தை) அரசுக்கு 'லெவி' யாகக் கொடுக்கவேண்டும்; இந்த உத்தரவு மீண்டும் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

"தஞ்சை மாவட்டத்தில் 'லெவி' முறை கடந்த திங்கள் ரத்து செய்யப்பட்டது; இதற்குப்பிறகு மாவட்டத்திற்குள்ளேயே அரிசி — விலை ஏறத் தொடங்கிவிட்டதால், மீண்டும் லெவி' முறையைச் செயல்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது; விலையேற்றத்தைத் தவிர்க்க இந்த நடவடிக்கை பயன்படும்"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது :—

"செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சை ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டுமே முன்பு 'லெவி' முறை செய்யப்பட்டது; இப்போது தஞ்சை மாவட்டத்தில் மட்டுமே மீண்டும் செயல்படுத்தப்படுகிறது."

சென்னை நகரில் அரிசி விற்பனை

"அரசின் கையிருப்பில் நல்ல — முதல் ரக அரிசி நிறைய இருக்கிறது; இதை அரசாங்க உணவுப் பங்கீட்டுக் கடைகள்மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

உணவுத் தானியங்களை கடத்தும் லாரிகள் பறிமுதல்

அரிசி, நெல் போன்ற உணவுத் தானியங்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் லாரியைப் பறிமுதல் செய்ய அதிகாரம் வழங்கும் வகையில் சட்ட திருத்தம் செய்ய அனுமதி கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப் போகிறோம்.

"மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ், கடத்தலுக்குப் பயன்படும் லாரியின் பெர்மிட்டைப் பறிமுதல் செய்யவே வழியிருக்கிறது; எனவே இந்தியாவின் பொருள்கள் கட்டுப்பாட்டுச் சட்டத் திருத்தத்தின் மூலமே இதைச் செய்ய முடியும்; அதற்காக மத்திய அரசுக்கு எழுத இருக்கிறோம்.

"**விவசாயிகளுக்குப் பயன்படுவதாக இருக்கும் என்று கருதி ஏற்கனவே தஞ்சை மாவட்டத்தில் நடைமுறையில் இருந்த 25 சதவிகித 'லெவி' முறை ரத்து செய்யப்பட்டது; ஆனால் இப்போது விலை ஏறிக்கொண்டே போகிறது; 57 கிலோ நெல் மூட்டை ஒன்று ரூ. 29.60 ஆக இருந்தது: இப்போது 36-லிருந்து ரூ. 38-வரை விலை உயர்ந்திருக்கிறது.**

சர்க்கரை விலை உயர்வு — கட்டுப்பாடு வரக்கூடும்

"சர்க்கரை விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது குறித்து தமிழக அரசு அதிர்ச்சி அடைந்திருக்கிறது; எனவே, சர்க்கரை உற்பத்தியில் 60 சதவிகிதத்தை அரசாங்கமே வாங்கிக்கொண்டு — எஞ்சியுள்ள 40 சதவிகிதத்தைப் பொது மார்க்கெட்டில் விற்பனை செய்ய ஓரளவு கட்டுப்பாட்டை மீண்டும் செயல்படுத்தும் யோசனை கூறி மத்திய அரசுக்குத் தமிழக அரசு கடிதம் எழுதும்.

சர்க்கரையின் விலை கிலோ ரூ 2-க்குமேல் விற்பதால் அரசு கவலையடைந்துள்ளது; சர்க்கரை விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது; இன்று சர்க்கரை கிலோ ரூ. 2.06-க்கு விற்கிறது.

"சர்க்கரை மீதான கட்டுப்பாடு அறவே ரத்துச் செய்யப்பட வேண்டும்" என்று டில்லியில் நடைபெற்ற உணவு அமைச்சர்கள் மாநாட்டில் கடந்த காலத்தில் நான் வற்புறுத்திப் பேசினேன்; ஆனால், சர்க்கரை விலை ஏறிவரும் விதத்தைப் பார்க்கும்போது, சர்க்கரை விற்பனைமீது ஒருவகையான கட்டுப்பாடு கொண்டு வரவேண்டியது அவசியம் என்ற துரதிருஷ்டவசமான முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. சர்க்கரை விலைக் குறைப்புக்கு இந்த நடவடிக்கை அவசியம் எனக் கருதுகிறோம்."

'போர் முரசு' கொட்டப்படுமானால்....

பகைப்புலத்தின் படை வலிமை என்ன ஆகும்?

இந்தியப் பாதுகாப்புத் துறை முன்னாள் அதிகாரி மதிப்பீடு

சென்னை, நவ. 5—

இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே போர் மூளுமா? — அப்படி மூண்டால் இந்தியப் படைமுன் பாகிஸ்தான் படை தாக்குப் பிடிக்குமா? நமது படை வலிமை எத்தகையது — பாகிஸ்தானிடமுள்ள பலம் என்ன? — என்பனவற்றையெல்லாம், இந்தியப் பாதுகாப்புத் துறை ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் கர்னல் ஆர். இராமராவ் புள்ளி விவரத்துடன் மதிப்பிட்டு எழுதியுள்ளார்; அவரது கட்டுரை வருமாறு :—

போர் தொடுக்கும் நாள் நிர்ணயம்

யாகியா கான் உள்ளிட்ட பாகிஸ்தான் தலைவர்கள் பலரும் நம் நாட்டிற்கு எதிராகக் கடந்த ஆறு மாதங்களாக — குறிப்பாகச் சென்ற நான்கு வாரங்களாகப் போர்க் குரலைப் பெரும் அளவில் எழுப்பிவந்திருக்கிறார்கள்.

அவர்களது கூற்றுக்கு ஏற்ப, குசராத்திலிருந்து காஷ்மீர்வரையில் மேற்கத்திய எல்லை நெடுகிலும் பாகிஸ்தான், தனது படை நடமாட்டத்தைத் தீவிரமாக்கியிருக்கிறது.

பாகிஸ்தானின் மேற்குப் பகுதியில் உள்ள படைகளில் சுமார் 80 சதவிகிதம், தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன; ரிசர்வ் படையினரைக் கடமையாற்ற வருமாறு மீண்டும் அழைத்திருக்கிறார்கள்; படையிலிருந்து அதிகாரிகளும் சிப்பாய்களும் விலகுவதையும், ஓய்வுபெறுவதையும் தள்ளிவைத்திருக்கிறார்கள்; எல்லைப் பகுதியிலுள்ள மக்கள் வெளியேற்றப்பட்டுவருகிறார்கள்.

இவையெல்லாம், பாகிஸ்தான் நம் நாட்டைத் தாக்குவதற்குத் தயாராகிவருகிறது என்பதையும், போர் தொடுக்கும் நாளை நிர்ணயிப்பது ஒன்றுதான் இனி செய்யவேண்டிய காரியம் என்பதையும் தெளிவாக்குகின்றன.

சிந்திக்கும் திறனுடையோர் அச்சம் கொள்ளுகின்றனர்

இந்தியாமீது தாக்குதலைத் தொடங்குவதற்குத் தயார் செய்வதற்காக இந்திய விரோத இயக்கத்தைத் தீவிரமாக்கிப் பாகிஸ்தான், தனது மக்களின் மனப்போக்கையே தனக்குச் சாதகமாக மாற்றிவருகிறது.

லாகூரிலும், சியால்கோட்டிலும் வாழ்ந்துவரும் பாகிஸ்தான் வர்த்தகர்களின் குடும்பங்களும் — மற்றவர்களும் நகரங்களை விட்டு வெளியேற தொடங்கி விட்டார்கள்; இது மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

மேற்குப் பாகிஸ்தானில் உள்ள சிந்திக்கும் திறனுடையவர்கள், எதிர்காலத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் அச்சத்தை இது காட்டுகிறது.

இந்த அச்சத்தை உறுதி செய்வது போலவும், பெரியதொரு நெருக்கடி வரப்போவதுபற்றிய அறிகுறிபோலவும் ஜெனரல் யாகியா கான், தமது ஈரான் பயணத்தைப் பாதியிலேயே முடித்துக் கொண்டு தம்முடைய தலைநகருக்குத் திரும்பிவிட்டார்.

இந்திய அரசுக்கு வேறு வழி உண்டா?

இந்தப் பயங்கர நிலைமையில், நமது தற்காப்பைப் பலப்படுத்திக்கொள்வதற்கு நமது அரசு எல்லா முயற்சிகளேயும் மேற்கொள்ளுவதைத் தவிர வேறு வழி இல்லை.

நாம் விரும்பாவிட்டாலும், போர் ஒன்று நம்மீது திணிக்கப்பட்டால் நமது படைகளைத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டிய அவசியமாகிறது; இதைத்தான் நமது தலைமை அமைச்சர் சென்ற சில நாட்களாக மீண்டும் மீண்டும் வலியுறுத்திவந்திருக்கிறார்.

யாகியா கான் தம்முடைய சொந்த முடிவாகவோ அல்லது உள்நாட்டு நிர்ப்பந்தங்களினாலோ வெகு விரைவில் இந்நாட்டின்மீது முழு அளவில் போர் தொடுக்கக்கூடும் — என்று இந்தத் துணைக்கண்டத்தில் அமைதியை மனப்பூர்வமாக விரும்பும் அனைவரும் கவலை கொண்டிருக்கிறார்கள்.

"பாகிஸ்தான் நம்மீது போர் தொடுத்தால் நமது பாதுகாப்புப் படைகள் ஆக்கிரமிப்பாளர்களுக்குச் சுடச்சுடப் பதிலடி கொடுக்கும்" என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் நாட்டிற்கு வாக்குறுதி தந்தபோது, இதனைத் தம் மனத்தில் கொண்டுதான் கூறியிருக்கக்கூடும்.

மின்னல் போர் முறை ஏற்படும்?

இரு தரப்புப் படைகளும் இத்தகைய இடர்ப்பாடுகளுக்கிடையே போர் நடத்தவேண்டும் என்பதைப் பரிசீலிக்கும்போது, இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே முழு அளவிலான போர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான் நடக்க முடியும்; ஆனால் நம்முடைய படை வலிமையுடன் நம் எதிரியின் படை அமைப்பை ஒப்பிடும்போது, அத்தகைய போர் மின்னல் போர் முறையாக அமையாது!

இரு நாடுகளுக்குமிடையே ஏற்படும் போரின் முடிவு பல அம்சங்களைப் பொறுத்ததாக இருக்கும்.

இந்நாட்டின்மீது தாக்குதல் நடத்துவதற்காகப் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் இடைவிடாமல் திட்டமிட்டுவந்திருக்கிறார்கள்; அதே நோக்கத்தில்தான தங்கள் வசதிகள் அனைத்தையும் வலுவான போர்ப்படை ஒன்றை உருவாக்கப் பயன்படுத்திவருகிறார்கள்.

இராணுவ ஆட்சியாளருக்கு ஏற்பட்ட பிரச்சினை

ஆயினும், வங்க தேசத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்துத் தங்கள் படைகளிலிருந்து வங்காளிகளை நீக்கிவிடும் பிரச்சினையில் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த நேரிட்டது.

குறிப்பாக, விமானப் படையிலிருந்தும் கடற்படையிலிருந்தும் வங்காளத்தைச் சேர்ந்த நுட்ப நிபுணர்களை அகற்றிவிட வேண்டியிருந்தது.

பாகிஸ்தான் விமானப் படையிலும் கடற்படையிலும் கிட்டத்தட்ட கால் பகுதியினர் வங்காளிகளாக இருந்தார்கள்.

இதைத் தவிர, வங்காள விடுதலை எழுச்சியை ஒடுக்குவதற்காக வங்க தேசத்திற்கு அனுப்பப்பட்ட படைகளுக்கு ஈடு செய்யும் வகையில் மேலும் இரண்டு மூன்று டிவிஷன்கள் திரட்டப்பட வேண்டியிருந்தது.

தற்போது படைக்கு ஆள் திரட்டும் பிரச்சினை சமாளிக்கப்பட்டிருக்கக்கூடும்; ஆயினும் எல்லாப் படை அணிகளும் முறைப்படி பயிற்சிப் பெற்ற படைக்கு எதிராக போர் நடத்துவதற்கு முழு அளவில் தகுதி பெற்றிருக்கின்றனவா என்பது சந்தேகமே!

பாகிஸ்தானின் படைபல நிலை

இரண்டாவதாக இரு நாட்டின் படைகளின் அளவை குறிப்பிடலாம்; 1965-ஆம் ஆண்டில் பாகிஸ்தான் ஏழு டிவிஷன்கள் அடங்கிய படையுடன் சண்டையிட்டது; நம்மிடமும் அதே அளவுக்கு அல்லது சற்றும் பெரிய படையிருந்தது. இப்போது பாகிஸ்தான் மேற்குப் பகுதியில் சுமார் 10 காலாட்படை டிவிஷன்களையும் இரண்டு டாங்கி டிவிஷன்களையும் ஒரு டாங்கிப் பிரிகேடையும் போரில் ஈடுபடுத்தும் நிலையில் இருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் இரண்டு அல்லது மூன்று காலாட்படை டிவிஷன்களுடனும், ஒரு டாங்கி பிரிகேடுடனும் சண்டையிடும் திறன் பெற்றிருக்கிறது.

பாகிஸ்தான் இராணுவத்தில் தற்போது சுமார் 1200 டாங்கிகள் இருக்கின்றன; இவற்றில் சுமார் 500 டாங்கிகள் அமெரிக்க 'பாட்டன் எம்-47' ரகத்தையும், 'எம்-48' ரகத்தையும் சேர்ந்தவை; சுமார் 200 லகு ரக டாங்கிகளும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை; 250 டாங்கிகள் இரஷ்யாவிலிருந்தும் 200 டாங்கிகள் சீனாவிடமிருந்தும் பெறப்பட்டவை.

சீனாவிடமிருந்தும் இரஷ்யாவிடமிருந்தும் பெற்ற டாங்கிகளும், குறைந்தது 100 பாட்டன் டாங்கிகளும் 1965-ஆம் ஆண்டுக்குப் பின்னர் சேர்க்கப்பட்டவை.

பாகிஸ்தான் தனது விமானப் படைக்காக 1965-ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 130 'மிக-19' ரகப் போர் விமானங்களையும், 16 'ஐ. எல்.-28' ரகக் குண்டு வீச்சு விமானங்களையும் சீனாவிடமிருந்து வாங்கியது.

26 'மிராஜ்-5' ரகப் போர் விமானங்கள் பிரான்சு நாட்டிடமிருந்தும், 90 'எப்-86' ரக சாபர் ஜெட் விமானங்கள் அமெரிக்காவின் ஆதரவுடன் ஈரான் நாட்டின் மூலமாகவும் பாகிஸ்தான் பெற்றுக் கொண்டது.

இவற்றைத் தவிர, பல நாடுகளிடமிருந்து ஹெலிகாப்டர்களையும், போக்குவரத்து விமானங்களையும், லகுரக விமானங்களையும் பாகிஸ்தான் பெற்றுக் கொண்டு இருக்கிறது.

இவ்வாறு புதிதாக பெறப்பட்ட 262 விமானங்களோடுகூட, 1965-ஆம் ஆண்டு போரின் போது தப்பிய விமானங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அதாவது, 'பி-57' ரக விமானங்கள் 32; 'எப்-104' நட்சத்திர ரக போர் விமானங்கள் 10; 'எப்-86' சாபர் ஜெட் விமானங்கள் 32; பயிற்சி விமானங்கள் 80 ஆகியவை 1965-ஆம் ஆண்டு சண்டைக்குப் பிறகு எஞ்சியிருந்த விமானங்கள்.

அறைகூவலை ஏற்கும் இந்தியாவின் நிலை

பாகிஸ்தானின் இந்த அறைகூவலை ஏற்கும் பொருட்டு, 1965-ஆம் ஆண்டுக்குப் பின் நாமும் நமது படை பலத்தைக் குறிப்பிடத்தக்க வகையில் பெருக்கியிருக்கிறோம்; குறிப்பாக, நாமே தயாரித்த 'விஜயந்தா' டாங்கின்மூலம் நமது கவச அணியை வலுப்படுத்தி இருக்கிறோம். விஜயந்தா டாங்கியில் வலிமை பொருந்திய 105 மி. மி. பீரங்கிபொருத்தப்பட்டிருக்கிறது.

உடனடித் தேவைகளைச் சமாளிப்பதற்காக நட்பு நாடுகளிடமிருந்து நடுத்தர — லகுரக டாங்கிகளையும்கூட நாம் வாங்கியிருக்கிறோம்.

இந்த நடவடிக்கைகளின் பயனாக, நமது தரைப் படைகள் மேற்கு எல்லையில் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வசதியையும், தாக்கும் சக்தியையும் பெற்றிருக்கின்றன.

படை பலத்தைப் பெருக்கும் முயற்சி 1963-ஆம் ஆண்டில் துவங்கியது; இதன் பயனாக, நமது தரைப் படையில் 8.50 இலட்சம் வீரர்கள் இருக்கிறார்கள்.

நமது மேற்குஎல்லையில் போதிய அளவு படைகளை நிறுத்துவதற்கும் அதேசமயத்தில் வடக்கு-கிழக்கு எல்லைகளிலும், வங்க தேச எல்லையிலும் கண்காணிப்பு தொடர்ந்து நீடிப்பதற்கும் நாம் வசதி பெற்றிருக்கிறோம்.

நமது விமானப் படையில் போர் விமானங்கள் போதுமான அளவில் சேர்க்கப்பட்டிருப்பதாலும் 'மிக்-21' ரக இடைமறிப்பு விமானங்களைப் புகுத்தி இருப்பதாலும், நமது விமானப் படையின் தாக்கும் வலிமை கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது; எனவே, நமது தரைப் படை — விமானப் படையின் ஆதரவை நம்பியிருக்கலாம்.

இந்தப் படைகளுக்கு அரவணைப்பாகத் தகவல் தொடர்பு ஏற்பாடும் நவீன வசதி கொண்டதாக உருவாக்கப்பட்டிருக்கிறது; இதனால் நமது படை மேலும் சிறந்த முறையில் இயங்க முடியும்.

இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்கும் போர் மூண்டால் கடற்படை, திட்டவட்டமான பணியை ஆற்ற முடியாவிட்டாலும், பயனுள்ள சேவை ஆற்றிட முடியும்; அப்படித்தான் நில அமைப்பும் மற்றவையும் அமைந்திருக்கின்றன.

கடற்படை வலிமையில் நாம் மேலான நிலைமையில் இருக்கிறோம் என்பதை நிச்சயமாகக் கூற முடியும்.

பாகிஸ்தான் அதிக நீர்மூழ்கிக் கப்பல்களையும், வேவு பார்க்கும் விமானங்களையும் வாங்கியிருந்த போதிலும், அதன் கடற்படை அணிகள் நமது கடற்பகுதியைத் தாக்கினால், பாகிஸ்தானுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தக்கூடிய வலிமையை நமது கடற்படை பெற்றிருக்கிறது.

போர்த் தந்திர முறை எவ்வாறு அமையும்?

மூன்றாவது அம்சம், போர்த் தந்திர முறை, போர் மூண்டால் சண்டை துவங்கும் நாளன்று இருக்கிற படைகளையும் — ஆயுதங்களையும் பயன்படுத்தித்தான் போரிட வேண்டியிருக்கும்.

போர் தொடங்கிவிட்டால், அதன் பிறகு எந்தத் தரப்புக்குமே வெளிநாடுகளிலிருந்து சாதனங்கள் கிடைக்காமல் போகக்கூடும்; அப்படி வெளிநாட்டு உதவி கிடைத்தாலும் கூட, அது வெற்றி — தோல்வியைப் பாதிக்கும் வகையில் இருக்குமா என்பது சந்தேகம்.

ஆகவே, உள்நாட்டு வசதி மூலம் கிடைக்கும் படை பலத்தைப் பராமரிப்பது சம்பந்தப்பட்ட வரைதான் போர்த் தந்திரமுறை அமைய முடியும். இந்தப் பிரச்சினையில், வலுவான இராணுவத் தளத்தை நாம் பெற்றிருப்பதன் பயனாக, மேற்கத்திய முனையில் நமது படைகள் மேலான நிலையில் இருக்கும்.

நம்பிக்கை முனையில் எத்தனை நாள் இருப்பர்

அதேபோன்று, கிழக்கு முனையில் ஒரு முறை போர் துவங்கிவிட்டால் — பின், வங்க தேசத்தில் உள்ள பாகிஸ்தான் படைகள், விமான மூலமான சப்ளையை மட்டுமே நம்பியிருக்கும் காரணத்தினால் — முக்கிய இராணுவத் தளத்துடன் தொடர்பு அறுபட்டு நாசமடைய நேரிடும்; பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் இதனை உணராமல் இருக்கமாட்டார்கள்.

ஆகவே, அவர்கள் பொதுவாக போர் ஒன்றைத் தொடங்கிவிட்டால், 'கத்தி முனையில் வங்க தேசத்தைக் கைப்பிடிக்குள் இனியும் வைத்திருக்க முடியாது' என்பதை அவர்கள் உணர்ந்துவிட்டதையே அது தெளிவாக்கும்.

மேலும் வங்க தேசத்தில் உள்ள தங்கள் படைகளைக் காக்க இயலும் என்ற நம்பிக்கையை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்பதையும் அது காட்டும்.

படிப்பினை பெற்றவர்கள் தீவிர பயிற்சி அளித்தனர்

அடுத்தது பயிற்சியும் — தலைமையுணர்வும். 1965-ம் ஆண்டுத் தோல்விக்குப் பிறகு பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் தக்க படிப்பினை பெற்றுத் தங்கள் படைகளுக்கு மேலும் தீவிரப் பயிர்சி அளித்துள்ளார்கள் என்றே நாம் வைத்துக் கொள்வோம்.

இந்த ஆண்டின் துவக்கத்தில் நிலைமை எவ்வாறாக இருந்திருந்தாலும், வங்க தேசத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள், பாகிஸ்தான் இராணுவத்தை மொத்தமாகவும் பாகிஸ்தான் சிப்பாயைத் தனிப்பட்ட முறையிலும் பாதித்துள்ளன என்பதை மறுக்கமுடியாது. ஒரு முன்னேற்பாட்டுடன் கூடிய எதிரியைச் சமாளிக்கும்போது பாகிஸ்தான் படைகள் — குறிப்பாகக் கீழ்மட்டத்தில் படையினருக்குச் சிறிய மாறுதலை ஏற்படுத்துவதற்குக்கூட அவகாசம் தேவைப்பட்டிருக்கிறது; இந்த அவகாசத்தை நமதுபோர்க்கள அணித் தலைவர்களும் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பாதுகாப்புப் பணியில் நமது அதிகாரிகளும் வீரர்களும் திறமைசாலிகளாகவும், கட்டுப்பாடு உடையவர்களாகவும், தன்னம்பிக்கையோடும் இருக்கிறார்கள். என்று நிச்சயமாகக் கூறலாம்.

பாகிஸ்தான் தலைமையில் ஒற்றுமை உண்டா?

இறுதியாக, போருக்கு முக்கியமான மேலிடத் தலைமை; பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியில் முழு ஒற்றுமை நிலவுகிறது என்று கூறமுடியாது.

யாகியா கான் பாகிஸ்தானின் அதிபர் என்று தம்மை அறிவித்துக் கொண்ட நாள் முதலே, 'நமக்கு எதிராகப் புரட்சி நடக்குமோ' என்ற அச்சம் அவரை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறது; இந்த அச்சம் இராணுவத் தலைவர் வரிசையை ஊடுருவி, போர் நடவடிக்கைகளையும் பாதிக்கும் அளவுக்கு விரிந்திருக்கிறது; குறிப்பாக, படைகள் பெரியதொரு தோல்வியைச் சந்திக்க நேரிடும்போது அதன் பாதிப்பு அதிகமாக காணப்படும்.

விவேகமும் பக்குவமும் நம்பிக்கையூட்டுகிறது

ஆனால், இதற்கு நேர்மாறான நிலையில், நாம் இருக்கிறோம்; நமது சனநாயக அமைப்புக்கு உறுதிப்பாட்டை அளித்திருக்கிறோம். நம்பிக்கையான அரசியல் தலைமையையும் — படைத் தலைமையையும் நாம் இப்போது பெற்றிருக்கிறோம்.

போரைத் தவிர்ப்பதிலும், அதே சமயத்தில் எந்த நிலைமையையும் சமாளிப்பதற்குத் தயாராவதிலும் நமது தலைவர்கள் காட்டிவருகின்ற விவேகமும் பக்குவமும் நம் நாட்டிற்கு நம்பிக்கையை ஊட்டுகின்றன.

யாகியா கானும் — அவரது தளபதிகளும் வெறி கொண்டு துணைக்கண்டத்தைப் போர்த் தீ சூழும்படி நடந்துகொள்வார்களேயானால் அவர்களுக்கு இந்நாடு சுடச்சுட பதிலடி கொடுக்கும் என்பது திண்ணம்.

காடுகள் தரும் செல்வம்

உதகையில் கருத்தரங்கு

'காடுகள் தரும் செல்வம்' பற்றிய மூன்று நாள் கருத்தரங்கு உதகமண்டலத்தில் கடந்த செவ்வாயன்று துவங்கியது; இதற்குத் தமிழ்நாடு வனத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன் தலைமை தாங்கினார்.

வேளாண்மைத் துறைச் செயலாளர் வேதநாராயணன், கருத்தரங்கைத் துவக்கிவைத்தார்.

"இந்தியாவில் மைசூருக்கு அடுத்தாற்போல தமிழ்நாட்டில்தான் அதிகச் சந்தன மரம் உற்பத்தியாகிறது.

"தமிழ்நாட்டில் மேலும் அதிகமான இடங்களில் முந்திரி பயிரிடவேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டிருக்கிறது"

என்று அமைச்சர் ஓ. பி இராமன் குறிப்பிட்டார்.

புதிய வரிகள்

அரியானா அரசு முடிவு

சண்டிகார், நவ. 5—

வங்க தேச அகதிகளுக்காகத் திரைப்பட டிக்கெட்டுகள் — ஸ்கூட்டர்கள், கார்கள் போன்றவைகள் — பரிசுச் சீட்டுக்கள் ஆகியவைமீது கூடுதல் வரி விதிக்க அரியானா அரசு முடிவு செய்திருக்கிறது.

கார்கள் — ஸ்கூட்டர்கள் ஆகியவைகளுக்கு 'டோக்கன்' வரியாக 10 சதவிகிதமும் திரைப்படம் — பரிசுச் சீட்டுகள் ஒவ்வொன்றுக்கும் 10 காசு கூடுதல் வரியும் விதிக்கப்படும்.

அடுத்த டிசம்பர் முதல் நாளிலிருந்து இது நடைமுறைக்கு வரும்.

இந்தியாவில் நாசவேலை செய்யப் பாகிஸ்தான் ஆட்கள்

பயிற்சி அளித்து அனுப்பி வைக்கப்படுகின்றனராம்

சரணடைந்த வங்காள இளைஞர்கள் வெளியிடும் தகவல்

கல்கத்தா, நவ. 5—

இந்தியாவில் நாச வேலைகளைச் செய்யும் பொருட்டுக் கிழக்கு வங்க மக்களுக்குப் பாகிஸ்தான் பயிற்சி அளித்து வருகிறது; இப்படிப் பயிற்சி அளிக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்த ஆறு இளைஞர்கள் இந்த உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றனர்; இவர்கள் இந்தியாவுக்குள் நுழைந்ததும், இந்திய அதிகாரிகளிடம் சரணடைந்தனர்.

இவர்கள், ரிச்ஷா ஓட்டுபவர்களும், கூலி வேலை செய்பவர்களுமேயாவர்; இந்தியா தங்களுக்குக் கெடுதல் செய்வதில்லை என்று உணர்ந்ததாலேயே தாங்கள் இங்கு நாசவேலை செய்யாமல் உண்மையைச் சொல்லிச் சரணடைவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தங்களைப்போல் உள்ளவர்கள் இந்த நாச வேலைப் படையில் சேருமாறு வற்புறுத்தப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

தங்களுக்குத் துப்பாக்கிச் சுடுதல், இதர ஆயுதங்களைப் பயன்படுத்துதல் போன்ற பயிற்சியை இராணுவம் தருவதாகத் தெரிவித்தனர்.

இந்தியாவிற்குள் நுழைந்ததும், சாலைகள் – பாலங்கள் – இரயில் பாதைகளைத் தகர்க்க வேண்டுமென்று இவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர்; ஒரு பிரிவில் 138 பேரில் 58 பேர் மட்டுமே முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்களாவர் என்றும், ஏனையோர் பொதுமக்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களாவர் என்றும் அவர்கள் கூறினர்.

பயிற்சிக் காலத்தில் இராணுவத்தினரின் மொழி (உருது) தங்களுக்குப் புரிவதில்லை என்றும், அதனால் அவர்கள் திட்டியும் -- சில நேரங்கள் உதைத்தும் செயல்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த செப்டம்பர் திங்களில் துவங்கிய பயிற்சியின்போது இவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 ஊதியம் அளிக்கப்பட்டதாம்; இரண்டு திங்கள் பயிற்சிக்குப்பிறகு திடீரென அக். 29 30 நாள் இரவில் இந்தியாவுக்குச் சென்று ஏதாவது நாசவேலை செய்து அடுத்த நாளே திரும்பிவிடுமாறு கூறப்பட்டதாம்; இதன் பிறகு அடுத்த பணி ஒப்படைக்கப்படும் என்று கூறி, இந்திய நோட்டுக்களாக ரூ. 20 தரப்பட்டதாம்.

இராணுவத்தினரே படகு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி -- அதில் இவர்களை ஏற்றி இந்தியாவுக்கு அனுப்பியிருக்கின்றனர்; பாகிஸ்தான் எல்லையைத் தாண்டும்வரையில் இராணுவத்தினர் கண்காணித்துக்கொண்டிருந்தனராம்.

இந்தியாவிற்குள் அவர்கள் நுழைந்தவுடனேயே அகதிகள் முகாமுக்குச் சென்று உண்மையைச் சொல்லி, அதிகாரிகளிடம் சரணடைந்திருக்கின்றனர்.

அசாம் முதல்வரின் திடுக்கிடும் தகவல்

ஷில்லாங், நவ. 5—

"உளவு வேலையிலும்--நாசவேலையிலும் பயிற்சி அளிப்பதற்காகக் கிழக்கு வங்காள எல்லையை யொட்டியுள்ள கச்சார் மாவட்டத்தைச் சேர்ந்த சில இளைஞர்களைப் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் வேலைக்கு எடுத்துக்கொண்டு- அவர்களுக்கு சில்ஹெட் மாவட்டத்தில் (கிழக்கு வங்கம்) உள்ள ?டம் நகர், பர்லேகா பயிற்சி முகாம்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்"

என்று அசாம் முதலமைச்சர் மகேந்திர மோகன் சௌத்ரி கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"இவ்வாறு பயிற்சி அளிக்கப்படும் நாச வேலைக்காரர்களை எல்லைப் பகுதிகளில் சாலை--இரயில் போக்குவரத்தைச் சீர்குலைப்பதற்காகச் சிறுசிறு குழுக்களாகப் பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவுக்கு அனுப்புகிறது.

"இந்தியாவைச் சேர்ந்த இரண்டு நாச வேலைக்காரர்களை கச்சார் மாவட்டத்தில் ஆகஸ்டு மாதம் போலீசார் கைது செய்தனர்.

நோட்டம் பார்க்கும் ஏழு பரண்கள்

ஜம்முவில் சாமப் ஜூரியன் பகுதிக்குக் குறுக்கே நோட்டம் பார்க்கும் உடரமான ஏழு பரண்களைப் பாகிஸ்தான் அமைத்திருக்கிறது. சர்வதேச மரபுகளுக்கு விரோதமாக அவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரண்கள் 18 மீட்டர் முதல் 21 மீட்டர் வரையில் உயரமானவை. (இந்தியப் பகுதியின் நிலவரத்தை நோட்டம் பார்ப்பதற்காக இதகைய பரண்கள் அமைக்கப்படுகின்றன)

சாம்ப்-ஜூரியன் எல்லைப் பகுதியில் 3 இராணுவ டிவிஷன்களை பாகிஸ்தான் நிறுத்தியிருக்கிறது; இவை, திக்கா கானின் தலைமை அலுவலகம் ஜீலம் நகரில் உள்ளது.

சேலத்துக்கு ஆபத்து இல்லை

தவருன செய்தி--- முதல்வர் விளக்கம்

சேலம், நவ. 3-

செய்தியாளர் :-"சேலம் இரும்பாலை பற்றித் தவருன செய்திகள் வெளிவருகின்றன; 'சேலத்து இரும்பு பயன்படத் தக்கதல்ல' என்று சிலரால் கூறப்படுகிறதே?'

முதலமைச்சர் கலைஞர் :- "சேலம் இரும்பு பயன்படத் தக்கதல்ல – என்று கூறப்படுவது சரியானதல்ல; இதனையொட்டி மத்திய அரசிடம் பேச்சுவார்த்தை நடத்துகிறோம்; ஆகவே, உடனடியாக சேலம் இரும்பாலை வேலை துவங்குவதில் எந்தத் தாமதமும் இருக்காது!"

கன்னியாகுமரியல்ல--- கிருஷ்ணகிரி!

சேலம், நவ. 5—

செய்தியாளர் :— "பொள்ளாச்சித் தொகுதியில் தேர்தல் நிலவரம் மற்றி உங்கள் கருத்து என்ன ?"

முதலமைச்சர் கலைஞர் :-"தமிழகத்து ஏடுகள் சிலவற்றைப் படித்துப் பார்த்தால், பொள்ளாச்சித் தொகுதி, 'கன்னியாகுமரி'போல் தோன்றும்; ஆனல் நான் நேரடியாகச் சென்று பார்த்ததில், 'அது, கன்னியாகுமரி அல்ல – கிருஷ்ணகிரி' என்று தெரிந்தது."

தலைமைக் கழக அறிவிப்பு

குடியேற்றம் நகர தி.மு.க.

வட்டச் செயலாளர் பொறுப்பில் இயங்கும்

வட ஆற்காடு மாவட்டம் குடியேற்றம் நகர தி. மு. க. கிளையின் நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களும் -- செயற்குழுவினரும் கழகக் கட்டுப்பாட்டுக்கு மாருகச் செயல்பட்டுவருவதையொட்டியும், அண்மைக் காலத்தில் கிளையின் நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களும் -- செயற்குழுவினரும் மேலமைப்புகளை அலட்சிய படுத்தும் போக்கில் தம்மிச்சையாகச் செயல்பட்டு நகரத்தில் கழக வளர்ச்சிக்கும் -- மெருமைக்கும் பெருமளவு ஊறு விளைவித்துள்ளதைக் கருதியும், இனி, அங்கு இப்போதுள்ள நிர்வாகப் பொறுப்பாளர்கள் குழுவும் -- செயற்குழுவும் முறைப்படியும் செம்மையாகவும் கழகப் பணி ஆற்றுவது இயலாததாகிவிட்டது என்று தலைமைக் கழகம் முடிவு செய்கிறது.

இந்த முடிவின் அடிப்படையில், குடியேற்றம் நகர தி. மு. க. கிளையின் செயற்குழுவும் -- நிர்வாகப் பொறுப்பாளர்கள் குழுவும் இன்றுமுதல் கலைக்கப்படுகின்றன.

குடியேற்றம் நகர தி. மு. க. கிளையின் நிர்வாகப் பொறுப்பை இன்றுமுதல் மறு அறிவிப்பு வரும்வரையில் குடியேற்றம் வட்ட தி. மு. கழகச் செயலாளரே ஏற்று நடத்திவருவார் என்பதும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

'அறிவகம்'
சென்னை-13
4-11-1971

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

படை நிலையங்களைப் பார்வையிடுகிருராம் யாகியா கான்

மூன்று நாட்கள் லாகூரில் முகாமாம்

புதுடில்லி, நவ. 5—

இந்தியாவின் மேற்கு எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் தனது படைகளை நிறுத்திவைத்திருப்பதாகவும், அதிபர் யாகியா கான் விமான மூலம் முன்னணிப் படை நிலைகளை மேற்பார்வையிட்டு வருவதாகவும் பாகிஸ்தான் வானெலி அறிவித்திருக்கிறது.

யாகியா கானுடன், உயர்தர இராணுவ அதிகாரிகளும் சென்றிருக்கின்றனர்.

"எல்லைக்கு அப்பால் 'இந்திய நடவடிக்கை'களைச் சமாளிப்பதற்காகப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன" என்றும் பாகிஸ்தான் வானெலி கூறியது.

இராணுவத்தினரின் உறுதியை யாகியா கான் புகழ்ந்து பாராட்டினராம்.

இராவல்பிண்டியிலிருந்து லாகூருக்கு வந்துள்ள யாகியா கான், இன்னும் மூன்று நாட்கள் லாகூரிலேயே தங்கியிருக்கப்போகிருராம்.

ரிக்க உளவுத் துறை நிபுணர்கள் நம்பவில்லை; ஆயினும் இரு தரப்புப் படைகளும் எதிரெதிரே நிற்பதனுல், அடுத்த மூன்று மாதங்கள் மிகவும் நெருக்கடி வாய்ந்ததாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிருர்கள்.

போர்த் தளவாடங்கள் கொண்டுவர முயற்சி

சீன -- ருமேனியாவுக்கு பாகிஸ்தான் கப்பல்கள்

சீனவிலிருந்தும் -- ருமேனியாவிலிருந்தும் இராணுவத் தளவாடங்களை ஏற்றிக்கொண்டுவர, இரு பாகிஸ்தான் கப்பல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

பீரங்கிகள், குறு பீரங்கிகள், இராணுவ வண்டிகள், டாங்கிகளுக்கான குண்டுகள், துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், சிறு ரகப் போர்க் கருவிகள் ஆகியவைகளைக் கொண்டுவருவதற்காகவே அவ்விரு கப்பல்களும் சென்றிருக்கின்றனவாம்.

பழி சுமத்தித் தாக்க முயற்சி

வங்க தேசக் கொரில்லாக்கள் இந்தியாவில் பயிற்சி பெற்றுத் தாக்கி வருவதாகக் கூறி, அந்தப் பகுதிகளை பாகிஸ்தான் தாக்கக்கூடும் என்று அமெரிக்க உளவுத் துறை, தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

நெருக்கடிக் கட்டம்

முதல் தாக்குதலை இந்தியா துவங்கும் என்பதை அமெ

சென்னை அமெரிக்கத் தகவல் நிலயம்

புதிய அதிகாரி பதவியேற்பு

சென்னை, நவ. 5—

இங்குள்ள அமெரிக்கக் கான்சல் -- ஜெனரல் அலுவலகத்தில் எம். லயால் பிரக்கன, கான்சல் பதவியேற்றுள்ளார்.

இவருக்கு முன்பு இந்தப் பதவி வகித்துவந்த லெராய் மேகபீஸ், புதிய பதவியேற்க நவம்பர் 12-ந் தேதி வாஷிங்டன் புறப்பட்டுச் செல்கிருர்.

பாங்காக் நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில பணியாற்றியவர் பிரக்கன். இவருக்கு 35 வயது.

கடத்தல் வியாபாரிகளின் மோசடி அம்பலம்

போலி பெர்மிட்டைக் காட்டி அரிசி கடத்த முயற்சி

600 மூட்டைகள் பறிமுதல்--- 9 பேர்கள்மீது வழக்கு

சென்னை, நவ. 5 —

போலி பெர்மிட்டுக்களை காட்டி கேரளத்துக்கு அரிசி கடத்தியதாக 9 பேர்மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னையைச் சேர்ந்த மூன்று வியாபாரிகள் -- உணவுவழங்கு துறையைச் சேர்ந்த ஓர் எழுத்தர் -- இரண்டு இரயில்வே ஊழியர்கள் ஆகியோரும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் உள்ளனர்.

ரூ. 60,000 மதிப்புடைய 600 மூட்டை -- அரிசி கோவையில் இரயில பெட்டியிலிருந்து கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்த மோசடி தெரியவந்துள்ளது; இது, சென்னையிலிருந்து அனுப்பப்பட்டது.

விலை ஏற்றம் என்ற கூற்று ஏன்?

சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலை ஏறியதா?

சேலம், நவ 5—

செய்தியாளர் :— "விலைவாசி உயர்வு போன மாததலைவிட இந்த மாதம் அதிகம்; போன ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகம்; இப்படி மிகமிக அதிகமாக விலை உயாந்துகொண்டு போகலாமா ?"

முதல்வர் கலைஞர் :— "அவ்விதம அதிகமாக விலை உயாந்த பொருள் எது ?'

செய்தியாளர் :—"கம்பு."

முதல்வர் :— "எத்தனைப் பேர் நாள்தோறும் கமபு உண்கிருர்கள் ?"

செய்தியாளர் :—"27 சதவிகிதம் பேர்."

முதல்வர் :—' சரி; வேறு எந்தப் பண்டம் விலை உயாநதிருக்கிறது ?"

செய்தியாளர்:—" அரிசி; கிச்சடி அரிசியின் விலை உயர்ந்திருக்கிறது."

முதல்வர் :—'மக்களில் எத்தனைப் பேர் அதை உண்கிருர்கள் ?"

செய்தியாளர் :— "பெரும்பாலும் அதை நடுத்தரக் குடும்பங்கள் பயன்படுததுகின்றன."

முதல்வர் :— "பெரும்பாலான சாதாரண மக்கள் உண்ணும் பண்டம் எதுவும் மிக அதிகமாக விலை உயர்ந்துவிடவில்லை;

"தஞ்சையில், 'லெவி' கூடாது என்று முன்பு வலியுறுத்தினர்கள்; அதற்கிணங்க, அரசு தற்காலிகமாக 'லெவி'யை நீக்கியது; அதைப் பயன்படுத்திக் கொண்டு, விலை உயர்வைச் சிலர் ஏற்படுத்துகிருர்கள்; இது பற்றி நான் ஏற்கனவே தஞ்சையில் அறிவித்ததுபோல், விலை உயர்வு காரணமாக மீண்டும் 'லெவி' கொள்முதலுக்கு அரசு ஆணை விரைவில பிறப்பிதது விடும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, ஆதியப்பநாயக்கன் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பட்டது.